# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 149/விசாரணை/E/2024**

திரு.N.சுப்ரமணியன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சி-1. .. பொது அதிகார அமைப்பு

******

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 10.03.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், திருச்சி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)/பொதுத் தகவல் அலுவலர் திரு.அதியமான் கவியரசு, 07.05.2026 அன்று நேரில் ஆஜராகி, திருச்சி மாவட்ட வருவாய் அலுவலர்/ மேல்முறையீட்டு அலுவலரின் 05.05.2026 தேதியிட்ட அறிக்கையை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

2. மேல்முறையிட்டாளர் 10.03.2026 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள இமெயில், இன்றைய விசாரணைக்கு தான் காணொலி வாயிலாக பங்கேற்றதாகவும், திரு.வெங்கடேஸ்வரன் என்பவர் மீது தான் அளித்த புகார் தொடர்பாக, இன்றைக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 2 வழக்குகள் தவிர்த்து, இன்னும் 5 வழக்குகள் நிலுவையில் இருப்பதாகவும், அவற்றின் மீது விரைவாக விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரியுள்ளார். அதனைத் தொடர்ந்து மேல்முறையீட்டாளர் 28.04.2026 அன்று இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள இமெயிலில், தான் ஏற்கனவே அனுப்பிய இமெயிலை பரிசீலனை செய்த பின்பாக உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியுள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

3. திருச்சி மாவட்ட வருவாய் அலுவலர்/மேல்முறையீட்டு அலுவலர் 05.05.2026 தேதியிட்ட தனது அறிக்கையில், ஆணையத்தின் 10.03.2026 தேதியிட்ட உத்தரவு பத்தி 5(1) தொடர்பாக, முன்னாள் வட்டத் துணை ஆய்வாளர் திரு.ஆர்.வெங்கடேஸ்வரன் என்பவர் மீது மேல்முறையீட்டாளர் அளித்த புகார் மனுவின் மீது நடவடிக்கை மேற்கொண்டு அவர் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 17(a)-ன் கீழ் வழங்கப்பட்ட தண்டனையின் நகலை இணைத்து திருச்சி மாவட்ட நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை உதவி இயக்குநர்/மேல்முறையீட்டு அலுவலரின் 15.04.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டாளருக்கு பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டு மேல்முறையீட்டாளர் அதனை 28.04.2026 அன்று பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்து, வழங்கப்பட்ட தகவலின் நகல், மேல்முறையீட்டாளருக்கு பதிவஞ்சலில் அனுப்பியதற்கான அஞ்சலக ரசீதின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளர் அதனை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை இணைத்து சமர்ப்பித்துள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

4. திருச்சி மாவட்ட வருவாய் அலுவலர்/மேல்முறையீட்டு அலுவலர் 05.05.2026 தேதியிட்ட தனது அறிக்கையில், ஆணையத்தின் 10.03.2026 தேதியிட்ட உத்தரவு பத்தி 5(2) தொடர்பாக, முன்னாள் திருச்சி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்/பொதுத் தகவல் அலுவலர் திரு.நெ.செல்வம் என்பவரின் 29.04.2026 தேதியிட்ட எழுத்துமூலமான விளக்கத்தை இணைத்து சமர்ப்பித்துள்ளார். முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் தனது எழுத்துமூலமான விளக்கத்தில், மேல்முறையீட்டாளரின் 27.07.2023 தேதியிட்ட மனு வரப்பெற்றபொழுது, தான் திருச்சி மாவட்டத்தில், தனித்துணை ஆட்சியர், சமூக பாதுகாப்புத் திட்ட அலுவலராகவும், திருச்சி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) ஆகவும் கூடுதல் பொறுப்பு வகித்து வந்ததாகவும், திருச்சி மாவட்டத்தில் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் சுமார் 1.05 இலட்சம் பயனாளிகளுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்கும் பணிகளும், முதல்வரின் முகவரித் துறை மூலம் பெறப்படும் அனைத்துத் துறை மனுக்களின் மீதான கண்காணிப்பு பணிகளும் தன்னால் மேற்கொள்ளப்பட்டதாகவும், இந்நேர்வில் கூடுதல் பணிச்சுமையின் காரணமாக மேல்முறையீட்டளாரின் 27.07.2023 நாளிட்ட மனுவிற்கு உரிய காலக்கெடுவிற்குள் பதில் வழங்க இயலவில்லை என்றும், இனி வருங்காலங்களில் இது போன்று தவறுகள் நடைபெறது என்றும் தெரிவித்துள்ளதை ஏற்று, அவர் மீதான நடவடிக்கையை இவ்வாணையம் இத்துடன் கைவிடுகிறது.

5. ஆகவே, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், மேல்முறையீட்டாளருக்கு அவர் கோரியவாறு அவரது புகார் மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தொடர்பான தகவல் தற்போதுதான் வழங்கப்பட்டுள்ளதால் அவருக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்காக தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 19(8)(b)-ன் கீழ் ரூ.2,000/- பொது அதிகார அமைப்பு மேல்முறையீட்டாளருக்கு வழங்கி, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்தது குறித்த அறிக்கையை **இவ்வாணையத்திற்கு 10.06.2026-க்குள் தவறாமல் பதிவஞ்சலில் அனுப்பி வைக்குமாறு திருச்சி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)/பொதுத் தகவல் அலுவலருக்கு** இவ்வாணையம் உத்தரவிட்டு, இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 11.05.2026**

**ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 149/விசாரணை/E/2024</u>**

பெறுநர்
மேல்முறையீட்டு அலுவலர்/
மாவட்ட வருவாய் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருச்சி-1.

பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருச்சி-1.

திரு.N.சுப்ரமணியன்
19, 9 கிராஸ், பாரதி நகர்,
திருச்சிராப்பள்ளி.620 017.

Copy to: File

RJ/PS 12.5